[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூலை 12

மேலும், இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. சுதர்சனம் என்பவருக்கு 50,000 ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன். அவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பொள்ளாச்சி தொகுதி, வடசித்தூர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தின் மேல் செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் 100 ஆண்டுகள் பாரம்பரியமுள்ள வடசித்தூர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளி விளையாட்டு மைதானத்தின் மேலே மின்சார வயர்கள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும், உயரழுத்த மின் கம்பங்களும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், மாணவ மற்றும் மாணவியர்கள் அச்சத்துடன் பள்ளி சென்று வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு காலத்தில் மின்சாரமே இல்லாத மாநிலமாக இருந்த தமிழகம் இன்று மின்மிகை மாநிலமாக வளர்ச்சி அடைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட, வரும் ஆண்டு மின்சார வாரியம் இலாபகரமாகச் செயல்படும் என்று தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்திருந்ததை மாற்றி, நேற்று வருகைபுரிந்த மாண்புமிகு மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தமிழக மின்சார வாரியம் இலாபகரமாக இயங்கும் சூழ்நிலையை அடையும் என்று நற்சான்று வழங்கி சென்றுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிலையில், நூறாண்டு பாரம்பரியமுள்ள மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம் வழியாகச் சென்று கொண்டிருக்கும் மின்சார வயர்கள் செல்லும் பாதையினை மாற்றியமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில், சிறந்த முறையில் மக்களுடைய இன்னல்களை போக்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசில், மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

2017 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த பள்ளியின் விளையாட்டு மைதானத்தின் மேலே 22 கிலோ வாட் உயரழுத்த மின் கம்பிகள் சென்று கொண்டிருக்கின்றன. அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்குண்டான தொகையை அந்தப் பள்ளி நிருவாகம் கட்ட வேண்டும் என்பதுதான் சட்ட விதி. அதற்கான கட்டணமாக ரூ.2,06,910/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அனுப்பப்பட்டது. அதனை அந்தப் பள்ளி நிருவாகம் கட்ட முடியாது என்று மறுத்துவிட்டார்கள். இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், அதனை அரசே ஏற்று மாற்றித்தர வேண்டும் என்று ஆணையிட்டு, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெட் வேகத்தில் செயல்படக்கூடிய அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக, (மேசையைத் தட்டும் ஒலி) எள் என்பதற்கு முன் எண்ணெய்யாக நின்று பள்ளி மாணவர்களின் குறைகளைத் தீர்த்து, அந்தப் பகுதி மக்களின் மனதில் மகிழ்வை உண்டாக்கிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS